تاميلي
தமிழ்

MahadSunnah

معهد السنة
As-Sunnah College

# ذنوب الخلوات

# இரகசிய பாவங்கள்


ஆசிரியர்:

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர் ,

மஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.



www.alsarhaan.com

WWW.MAHADSUNNAH.COM

# இரகசிய பாவங்கள்

மனிதன் இயல்பில் தவறு செய்பவன்தான், தவறு செய்தால் உடனடியாக பாவமன்னிப்புக் கோரவேண்டும், பாவமன்னிப்பு தேடும் அடியானை அல்லாஹ் விரும்புகின்றான், மன்னிப்புக் கேட்டால் மகிழ்ச்சி அடைகின்றான். பாலைவனத்தில் ஒட்டகத்தைத் தவறிய மனிதன் அதை மீளப் பெற்றதும் அடையும் மகிழ்ச்சியை விட பன்மடங்கு தௌபாச் செய்தால் அல்லாஹ் அடைகின்றான்.

குறிப்பாக ஒவ்வொரு முஸ்லிமும் இரகசிய பாவங்களில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மக்களுக்குப் முன்னால் பாவத்தை மறைத்து, அல்லாஹ்வுக்கு முன்னால் வெளிப்படுத்துபவர்களை அல்லாஹ் இகழ்ந்துள்ளான்.

திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான்:

**அவர்கள் மனிதர்களை விட்டும் மறைக்கின்றனர், அல்லாஹ் அவர்களோடு இருக்கிறான் என்பதை உணராது வெளிப்படுத்துகின்றனர்.** (4:108)

நபி (ஸல்) அவர்கள் ரகசிய பாவங்களை எச்சரித்து பின்வருமாறு கூறினார்கள்:

**மனிதர்களில் சிலர் மலை போன்ற நற்கருமங்களுடன் நாளை மறுமையில் வருவார்கள், அவற்றை அல்லாஹ் பறக்கும் புழுதியாக மாற்றுவான், அப்போது நபித்தோழர்கள் அவர்கள் யார்? என வினவினர். அதற்கு நபியவர்கள் அவர்கள் நல்லோர்கள், தொழுபவர்கள் ஆனால் தனிமையில் ஹராமான விடயங்களை மீறக்கூடியவர்கள் என பதிலளித்தார்கள்.**

(இப்னு மாஜாஹ்:4245)

## ரகசிய பாவங்களிலிருந்து விடுபடுவது எப்படி ?

- அல்லாஹ்விடம் பாவங்களை விட்டும் என்னை திருப்பிவிடு என கெஞ்சிக் கேட்க வேண்டும்.
- வணக்கங்களில் ஈடுபட்டு உள்ளத்தை சுத்தப்படுத்தி மனசுடன் போராட வேண்டும்.
- தனிமையை தவிர்த்து நன்மக்களுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும்.
- எல்லா நிலையிலும் அல்லாஹ் என்னை உற்று நோக்குகின்றான் என்ற உணர்வை வரவழைக்க வேண்டும்.
- பாவத்தில் ஈடுபடுகின்ற போது தான் மதிக்கும், கண்ணியப்படுத்தும் நபர்களை மனக்கண் முன் நிறுத்தி வெட்கத்தை வரவழைத்த பின் நான் அல்லாஹ்வுக்கு முன் எவ்வளவு வெட்கப்பட வேண்டும் என்ற உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

- ஒரு நபிமொழியில்  உன் நெருங்கிய உறவுக்காரர் முன் வெட்கப்படுவதை விட அல்லாஹ்வுக்கு முன் வெட்கப்படு என வந்துள்ளது.
- மேலும் மரணத்தை நினைத்துப் பார்த்தல், பாவத்தில் ஈடுபடுகிற போது மரணம் வந்தால் என்னவாகும், இந்நிலையில் எப்படி இறைவனை சந்திப்பேன்  என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.
- அதேபோல் அடியார்களுக்கு அல்லாஹ் வாக்களித்த நன்மைகளையும் பாவிகளுக்கு அவன் விடுக்கும் எச்சரிக்கைகளையும் மனதில் கொள்ளவேண்டும்.